# சுவரொட்டிக்காகச் சண்டை




வெறுமே இரண்டு கண்ணும் வாயும் மட்டும் போட்டு, 'தீம்தரிகிட' என்ற எழுத்து மட்டுமே கொண்ட சுவரொட்டியொன்று சென்னையில் பல இடங்களில் ஒட்டப்பட்டிருந்தது. ஒரு புதிய பத்திரிகைக்கான விளம்பரம் இது. சென்னையில் பரீக்ஷா என்கிற நாடகக் குழுவை நடத்திவரும் 'ஞாநி' மாதமிருமுறை இந்த இதழை வெளியிடத் திட்டமிட்டிருக்கிறார்.

விளம்பர போஸ்டர்கள் ஒட்ட மாநகராட்சியை ஞாநி அணுகியபோது, ஒரு சுவரொட்டிக்கு இருபத்தைந்து பைசா வீதம் வரி வசூலித்திருக்கிறார்கள். இந்த வரி 1919 - ம் வருட மாநகராட்சி சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதாம். ஆனால் அந்தச் சட்டத்தில் எந்த ஷரத்துக்களிலும் இதைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லையாம்.

தன் ஆட்சேபத்தை எழுத்து மூலம் தெரிவித்துவிட்டு, கட்டணத்தை செலுத்தினார் ஞாநி. பிறகு மாநகராட்சியின் மீது வழக்கு தொடர்ந்திருக்கிறார்.

''என்னுடைய சுவரொட்டியின் அளவு முப்பதுக்கு இருபது அங்குலம். இதற்கு 25 பைசா ஒரு வாரத்திற்கு வரியாக வசூலிக்கிறார்கள். இந்தத் தொகையை அதிகாரிகளே நிர்ணயிக்கிறார்கள். இவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்த அதிகாரம் சட்டத்திற்குப் புறம்பானதாகும். மேலும், இந்தச் சுவரொட்டிகளுக்கு ஒரு வார காலம்தான் அவகாசம். அடுத்த வாரம் மறுபடியும் வசூலிக்கிறார்கள். ஆனால் அந்த ஒரு வாரம் வரை நம்முடைய சுவரொட்டிகள் பத்திரமாக இருக்க மாநகராட்சி எவ்வித உத்திரவாதமும் தருவதில்லை. வரி செலுத்திய சுவரொட்டிகளைத் தனியாரின் வீட்டுச் சுவர்களில் ஒட்டினால் வீட்டுச் சொந்தக்காரர் அதற்காக வழக்குத் தொடரலாம். வரி கட்டிய பின்னும் வழக்கென்றால் அந்த வரியே சட்டவிரோதமாகிறது!'' என்கிறார் ஞாநி.

ஒட்டப்படும் விளம்பரங்களுக்கு மட்டுமே வரி வசூலிக்கப்படுகிறதாம். பெயிண்டினால் வரைந்தாலோ எழுதினாலோ வரி கிடையாது! ஒரே சுவரில் செய்யப்படும் இரு விளம்பரங்களுக்கு இது முரண்பாடு என்கிறார் ஞாநி.

"இந்த வரி அரசியல் கட்சிகளின் சுவரொட்டிகளுக்குக் கிடையாது. அரசியல் கட்சிகளுக்கு மட்டும் வரி விலக்கென்பது அரசியல் சட்டத்துக்கு முரணானது.

கருத்துச்சுதந்திரம் அனைவருக்கும் பொது. அரசியல் கட்சியைத் துவக்குவது போல் பத்திரிகையையும் துவக்குகிறோம்.

அப்படியிருக்க , பத்திரிகையின் சுவரொட்டிகளுக்கு மட்டும் வரி போடுவது கருத்துச் சுதந்திரத்தில் குறுக்கிடுவதாகும்,'' என்கிறார் ஞாநி.

மார்ச் முதல் தேதியில் வரவிருக்கும் பத்திரிகைக்காக இன்னும் இரண்டு வித போஸ்டர்கள் வெளியிடவிருக்கிறார் இவர். "வழக்கு நீண்டுகொண்டே போனாலும் இடைக்காலத் தடையாவது கோரப் போகிறேன்,'' என்கிறார்.

**பேட்டி : சுதாங்கன்.**

குமுதம் - **11.2.1982**